**பிப்ரவரி - 25**

**"மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." - மத் 4 : 4**

மனிதனின் ஜீவன் அவன் வைத்திருக்கும் ஆகாரம், உடை முதலிய பொருள்களின் மிகுதியினால் ஆக்கப்பட்டிருக்கிறது என்பது அல்ல. ஆனால் அவனது ஜீவன் மிகவும் நிறைவான, மேன்மையான, உயர்ந்த அர்த்தத்தின்படி தான் முற்றிலுமாக தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்திருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் ஜாக்கிரதையாய் கவனிப்பதின் மேலும் சார்ந்திருக்கிறது என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒவ்வொரு கடிந்து கொள்ளுதலும், ஒவ்வொரு உற்சாகப்படுத்தலும், ஒவ்வொரு வாக்குத்தத்தமும் இராஜ்யத்தில் தன்னுடைய குமாரனோடு சுதந்தரராக நித்திய ஜீவனுக்கு யாரைத் தேவன் இப்பொழுது அழைத்துக் கொண்டிருக்கிறாரோ அவர்களுடைய அபிவிருத்திக்கு அவசியமாக இருக்கிறது. கர்த்தராகிய யேசுவின் சீஷர்களாகவும், மாணவர்களாகவும் நாம் இந்த மூலவாக்கியத்தின் வார்த்தைகளில் அடங்கியுள்ள யோசனைகளை அதிகதிகமாக ஞாபகத்தில் வைத்து அவைகளின் படி செய்வோமாக. **– Z ’02, 246, 248 (R 3058).**

ஒரு மனிதனுடைய ஜீவன் அவன் அனுபவிக்கும் உலகப் பொருள்களினால் ஆக்கப்பட்டிருக்கவில்லை. ஜீவனைக் கொடுப்பது, பராமரிப்பது ஆகிய இரண்டிலும் உண்மையாகவே எண்ணப்படுகிற காரியங்கள், தேவனுடைய வார்த்தையின் போதனைகளாகும். ஆகையால், யார் தங்களுடைய ஜீவனை உலகப்பொருள்களின் மூலமாகப் பாவத்தால் பராமரிக்க நாடுகிறார்களோ அவர்கள் மிகவும் தவறாக உணர்ந்திருக்கிறார்கள். பிரதிக்கிரியை காண்பிக்கும் கீழ்ப்படிதலுள்ள இதயங்களுக்கு, தேவனுடைய வார்த்தை ஆவியும் ஜீவனுமாயிருக்கிறதால் அவர்களுக்கு அது வல்லமையுள்ளதாயும் ஜீவனைக் கொடுக்கிறதாயுமிருக்கிறது. **- P ’32, 15.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

உபா 8:3; சங் 17:4; 19:7-11; 43:3; 107:19,20;119:11,14,24,25,28,41,54,69,72,77,81,92,93,103,144,159,173,174; ஏசா 30:21; எரே 15:16; எசே 3:3; ஆமோ 8:11,12; மத் 7:24-27; லூக் 11:28; யோவா 5:24,39; 15:3; 20:31; அப் 20:32; 1தீமோ 4:5,6.

**கோபுர வாசிப்பு : Z ’11, 387 (R 4896).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் எதைக் கொண்டு ஜீவித்திருந்தேன்? எப்படி? ஏன்? பலன் என்ன?